## கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ஈஎஸ்டீபீ) - மாகாண மட்டம் - 2016

கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (ஈஎஸ்டீபீ) 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரட்டிய நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகளின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 3008 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க சாதாரண செயற்பாடுகள் மற்றும் 3009 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க விசேட செயற்பாடுகள் கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளானவை கல்வி அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம் மற்றும் கல்விப் பிரசுரங்கள் திணைக்களம் என்பவற்றினால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கின்ற அதேநேரம் மாகாண மட்டத்திலான நடவடிக்கைகளானது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினாலும் அனைத்து மாகாண சபைகளின் மாகாண கல்வி அமைச்சினாலும் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நாட்டின் பொதுக் கல்வித்துறை முகங்கொடுக்கின்ற சவால்களுக்கு நிவாரணமளிக்கும் கல்வித்துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2013-2017 இனை அமுல்படுத்துவதற்கான நிதி ஆதரவை வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. ஆண் மற்றும் பெண் இரண்டாந்தர பாடசாலைப் பட்டதாரிகளின் தொழில்வாய்ப்பினை மேம்படுத்துகின்ற நவீனமயப்படுத்தப்பட்ட இரண்டாந்தர கல்விப் பாடசாலை முறைமையை அபிவிருத்தி செய்வதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயமானது ரூபா 26,000 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியனாக இருந்தது. நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 ஆகஸ்ட் 23 அந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி பூர்த்திசெய்யப்படுவதற்குப் பட்டியலிடப்பட்டிருந்தது. மாகாண சபைகளின் கீழ் செயற்படுகின்ற மாகாண அமைச்சுக்கள் மற்றும் கல்வித் திணைக்களங்களால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.3 திரட்டிய நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகளுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

மாகாண சபைகளின் மாகாண கல்வி அமைச்சுக்களினது ஒதுக்கீட்டுக் கணக்குகளின் ஒன்று திரட்டலான இந்த திரட்டிய நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகளை பொதுத்துறை கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த திரட்டிய நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கை மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. திரட்டிய நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் திரட்டிய நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் திரட்டிய நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையை ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) திரட்டிய நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) திரட்டிய நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகளானது நிதிப்பிரமாணம் 150 மற்றும் தொடர்புபட்ட மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களால் வழங்கப்பட்ட சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைகளின் 2016 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளானவை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் தொடர்புபட்ட மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. மேற்கூறிய ஒதுக்கீட்டுக் கணக்குகளானவை பொதுத்திறைசேரியின் கணனி அச்சுப் பிரதிகள், வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் மாகாண சபைகளின் கல்வி அமைச்சுக்களால் பேணப்பட்ட ஏடுகள், பதிவேடுகள், குறிப்புக்கள் என்பவற்றுடன் இணங்கியிருந்தன. கடன்பெறுவனவுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கிரயங்களானவை மாகாண சபைகளின் கல்வி அமைச்சுக்களது 2016 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் காலக்கிரமத்தில் முழுமையாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிச்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஔஎவ்பி/ஈஆர்டி/2007/2 சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 மே 30 இல் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியங்களின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2016 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு தொடர்பான குறித்த சில முக்கிய தரவுகள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2016 ஆம் ஆண்டின் போது | | 2016 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடீபீ | 200 | 26,000 | 4,900 | 17 | 2,399 | 137 | 18,323 |
| **மொத்தம்** | **200** | **26,000** | **4,900** | **17** | **2,399** | **137** | **18,323** |

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மாகாண சபையின் ஒதுக்கீட்டு கணக்குகளின் பிரகாரம், மாகாண கல்வி அமைச்சுக்களின் மூலதனச்செலவினங்களை ஈடு செய்வதற்கு மாகாண சபைகளுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 21,863 மில்லியன் தொகை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 9,661 மில்லியன் தொகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், கிழக்கு மாகாணத்தின் மாகாண கல்வி அமைச்சின் மூலதனச் செலவீனங்களை ஈடுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,582 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளில் ரூபா 601.61 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, சப்ரகமுவ மற்றும் வட மேற்கு மாகாணங்களில் மூலதனச் செலவீனத்தை ஈடுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளின் 60 சதவீத மற்றும் 54 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் செலவழிக்கப்படாதிருந்தது.

## 3.2 பௌதீகச் செயல் முன்னேற்றம்

கடன் உடன்படிக்கையின் பட்டோலை 03 இன் பின்னிணைப்பு 01 இன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளானது 09 பணவளிப்பு இணைப்பு பெறுபேறுகளின் கீழ் 33 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளை அடைந்து கொள்வதற்காக அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனைத்து நிதி மூலங்களிலிருந்து கல்வித்துறைக்காக மாகாண சபைகளால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 132,856 மில்லியன் மொத்தச் செலவினத்திற்கான ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மாகாண சபைகளின் கீழ் செயற்படுகின்ற மாகாண கல்வித் திணைக்களங்களினதும் மாகாண கல்வி அமைச்சுக்களினதும் செயற்பாடுகள் தொடர்பாக 2016 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீது மேற்கொள்ளப்பட்ட முக்கிய சில கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு மீள வழங்கப்படுகின்றது.

(அ) பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகள் 01 இன் பிரகாரம், பாடசாலைப் பரீட்சாத்திகளின் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைகளின் சித்தியடைதல் விகிதம் மீளாய்வாண்டின் போது 63 சதவீதத்தை அடைந்திருத்தல் வேண்டும். பரீட்சை திணைக்களத்தின் செயன்முன்னேற்ற அறிக்கைளின் பிரகாரம், பாடசாலைப் பரீட்சாத்திகளின் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைகளில் சித்தியடைதல் விகிதம் 69.94 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும், பாடசாலைப் பரீட்சாத்திகளின் க.பொ.த (சாதாரணதர பரீட்சைகளில்) சித்தியடைதல் விகிதமானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முறையே 60.66 சதவீதம் மற்றும் 61.56 சதவீதமாக சராசரி வீதத்தை விடக் குறைவாகக் காணப்பட்டது. மேலும், பாடசாலைப் பரீட்சாத்திகள் க.பொ.த (சாதாரணதரப் பரீட்சையில்) அனைத்து பாடங்களிலும் சித்தியடையாமையின் சராசரி சதவீதம் 3.11 சதவீதமாகக் காணப்பட்டது. ஆகவே க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையாமை விகிதமானது வடமத்திய மற்றும் வட மாகாணங்களில் முறையே 4.01 சதவீதமாகவும் 4.47 சதவீதமாகவும் காணப்பட்டது.

(ஆ) பணவளிப்பு இணைப்பு குறிகாட்டி – 02 இன் பிரகாரம், மாகாண பாடசாலைகளில் விஞ்ஞான மற்றும் வர்த்தக பிரிவுகளில் மாணவ எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் கலைப்பிரிவில் மாணவ எண்ணிக்கையை குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. மேலும், பணவளிப்பு இணைப்பு விளைவுகள் - 02 இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் பிரகாரம், க.பொ.த (உயர்தரத்தின்) சித்தியடைதல் வீதத்தை 64 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், மீளாய்வாண்டின் போது உரிய சித்தியடைதல் வீதம் 62.17 சதவீதமாகவிருந்தது. 2016 இல் நடைபெற்ற க.பொ.த (உயர்தரத்தின்) பரீட்சையின் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கலைப்பிரிவின் அனைத்து 03 பாடங்களின் சித்தியடைதல் வீதம் 67.07 சதவீதமாகவிருந்ததுடன் 2016 இல் நடைபெற்ற க.பொ.த (உயர்தரம்) இன் அனைத்து 03 பாடங்களின் ஒட்டுமொத்த சித்தியடைதல் வீதத்தை அதிகரிப்பதற்கு பெரும்பாலும் செல்வாக்கு செலுத்தியது.

(ii) பரீட்சைத் திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், க.பொ.த (உயர்தரத்தில்) தோற்றிய 211,865 பாடசாலை பரீட்சார்த்திகளில் 3.05 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 6,468 மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் ''ஏ'' தரத்தினை அதே நேரம் வடமத்திய மாகாணத்தின் 10.51 சதவீதத்தை உள்ளடக்கி 8.36 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 17,702 பாடசாலை மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் தோல்வியடைந்திருந்தனர்.

(iii) மேலும், வர்த்தகபிரிவிலுள்ள பாடசாலை மாணவர்கள் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் 69.64 அதிக சதவீதமாக பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றிருந்த அதேநேரம், பௌதீக விஞ்ஞானப்பிரிவில் 53.26 சதவீத பாடசாலை மாணவர்கள் உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் 53.35 சதவீதம் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றிருந்தனர்.

(iv) பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் கல்வியில் புதிதாக அறிமுகப்படுத்த பிரிவுகளில் கல்வி கற்ற பாடசாலை மாணவர்கள் முறையே 55.58 சதவீதம் மற்றும் 60.16 சதவீத சித்தியடைதல் வீதத்தை பதிவுசெய்திருந்தது. எனினும், பொறியியல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் உயிரியல் விஞ்ஞான தொழில்நுட்ப பிரிவுகளில் 10 பாடசாலை மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் ''ஏ'' தரத்தினைப் பெற்றிருந்த அதேநேரம், உரிய பிரிவுகளிலுள்ள 1,384 பாடசாலை மாணவர்கள் தோல்வியடைந்திருந்தனர்.

(இ) பணவளிப்பு இணைய குறிகாட்டி 08 இன் பிரகாரம், பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் தேவையான உபகரணத்துடன் 100 பாடசாலைகளில் தொழில்நுட்ப பிரிவை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. தொழில்நுட்ப பிரிவுக்கான வகுப்புக்கள் அனைத்து மாகாணங்களின் 251 பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா, கோமஹம, கொரணை, களுத்துறை, பிலியந்தல, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, வடமாகாணத்திலுள்ள கிளிநொச்சி, வடமத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம், திம்புலஹல, கெலன்விந்துணெவா, ஹிங்குறாகொட, கெக்கிறாவ, பொலனறுவை, தம்பத்ஹம, மற்றும் ஊவா மாகாணத்திலுள்ள பண்டாரவெல, விவிலே, மொனராஹல, பாசற மற்றும் வெலாவய போன்ற வலய கல்வியின் 25 மாகாண பாடசாலைகளில் எந்த ஆசிரியரும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பொல, கலவெல மற்றும் மீஹகில கல்வி வலயங்களிலுள்ள 03 பாடசாலைகளில் 14 ஆசிரியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப பிரிவு வகுப்புகளிற்கு எந்த மாணவர்களுமிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆகையால், மாகாண பாடசாலைகளில் தொழில்நுட்ப பிரிவு வகுப்புக்களை நடாத்துவதற்கு ஆசிரியர்களின் ஒதுக்கீடானது நியாயமான முறையில் நடைபெற்றிருக்கவில்லை என வெளிப்படுத்தியது.

(ஈ) க.பொ.த (உயர்தர) விஞ்ஞான பிரிவுகளிற்காக வகுப்புக்களுடனான பாடசாலைகளாக நாடளாவியரீதியில் 255 மாகாண பாடசாலைகள் வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், க.பொ.த (உயர்தரம்) போன்றவற்றிற்காக ஆசிரியர்கள் போதியளவில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கவில்லை என விரிவான விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், 255 மாகாண பாடசாலைகளிலுள்ள 57 பாடசாலைகளில் இரசாயனவியல், 63 பாடசாலைகளில் பௌதீகவியல், 59 பாடசாலைகளில் உயிரியல் விஞ்ஞானம், 95 பாடசாலைகளில் கமநல விஞ்ஞானம், 72 பாடசாலைகளில் இணைந்த கணிதம், போன்ற பாடங்களிற்கான ஆசிரியர்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைக்கமர்த்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சையின் பிரகாரம், வட மேற்கு மாகாணத்தில் 126 தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் தாகிக்கப்பட்டிருந்ததுடன் உரிய பாடங்களிற்கான 47 ஆசிரியர்களின் பற்றாக்குறை, கற்பித்தல் உபகரணம் மற்றும் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணம் போன்றன போதியளவில்லாமை போன்ற பல காரணங்களால் க.பொ.த (உயர்தரம்) இற்காக விஞ்ஞான மற்றும் கணித வகுப்புக்கள் 36 பாடசாலைகள் தொடங்கியிருந்தது. வடமேல் மாகாணத்திலுள்ள 08 பாடசாலைகளிலுள்ள விஞ்ஞான மற்றும் கணித வகுப்புக்களானது 05 மாணவர்களை விட குறைவாக உள்ளடங்கியிருந்ததுடன் அத்தகைய பிரிவுகளிற்கான மாணவர்கள் ஆட்சேர்த்தலானது குறைவானதாகவிருந்தது என சான்றுறுதிப்படுத்தியது.

(ஊ) பணவளிப்பு இணைப்பு குறிகாட்டி 08 இன் பிரகாரம், உரிய அமச்சு மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்களுக்கிடையில் செயலாற்றல் அடிப்படையிலான பங்குடமை உடன்படிக்கைகள் பாடசாலைக்கல்விக்காக ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட மூலதன பாதீட்டில் ஆகக்குறைந்த 85 சதவீதம் 2016 இல் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், மாகாண மற்றும் மத்திய மட்ட வேலைத்திட்டங்களுடன் இணங்குவதற்கு மீளாய்வு செய்வதற்கு வேண்டப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்கான 09 மாகாண சபைகளின் மொத்த மூலதன ஒதுக்கீடு ரூபா 21,863,22 மில்லியன் தொகையானதுடன் அந்த மூலதனச்செலவினத்திற்கான ஆரம்ப ஒதுக்கீட்டின் 44 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 9,661.31 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. வடமத்திய மற்றும் தென் மாகாணங்கள் ஆரம்ப ஒதுக்கீட்டின் 26.93 சதவீதத்தை மற்றும் 34.43 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற மூலதன ஒதுக்கீடுகளின் பயன்பாட்டில் ஆகக்குறைந்த சதவீதத்தை அறிக்கையிட்டிருந்தது.

(எ) பாடசாலை எண்ணிக்கை 2016 இன் பிரகாரம், நாடளாவிய ரீதியிலுள்ள 10,162 பாடசாலைகளில், 7,832 பாடசாலைகள் 500 மாணவர்களை விட குறைவான மாணவர்களைக் கொண்டுள்ளது. மேலும், மேற்பொள்ளப்பட்ட விரிவான கணக்காய்வின் பிரகாரம், ஊவா மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகள் தவிர்த்துள்ள 644 மாகாண பாடசாலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூடப்பபட்டிருந்தது. தென் மாகாணத்திலுள்ள 165 மாகாண பாடசாலைகள் மற்றும் மேல் மாகாணத்திலுள்ள 146 மாகாண பாடசாலைகள் மற்றும் வடமேல் மாகாணத்திலுள்ள 113 மாகாண பாடசாலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூடப்பட்டிருந்தது. எனினும், நாட்டிலுள்ள குறைந்த சலுகையுள்ள மாணவர்களுக்கு கல்வி வசதிகளை வழங்கும் வகையில் அத்தகைய பாடசாலைகளை மூடுவதற்கும் மீள திறப்பதற்குமாக காரணங்களை விசாரணை செய்வதற்கு மாகாண கல்வி அமைச்சுக்களுடன் இணைந்து வரிசை அமைச்சால் பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.